**மார்ச் – 31**

# TNPSC துளிகள்

- விப்ரோ நிறுவனம் மற்றும் கரக்பூரின் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை இணைந்து ஐந்தாம் தலைமுறை வலையமைப்புகளின் வடிவமைப்பு, திட்டமிடல் மற்றும் செயல்பாடுகள் ஆகியவை தொடர்பான தொழிற்துறை சவால்கள் மீதான பயன்பாட்டு ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவிருக்கிறன.
- அமெரிக்க வரலாற்றில் மிக நீண்ட காலம் வாழும் தலைமை நிர்வாகியாக நோபல் பரிசை வென்றவரும் அமெரிக்காவின் 39-வது அதிபருமான முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர் உருவெடுத்துள்ளார். தற்பொழுது இவருடைய வயது 94 ஆகும்.
- இந்திய ஏற்றுமதி – இறக்குமதி வங்கியானது மத்திய ஆப்பிக்க நாட்டில் மூன்று சூரிய ஒளித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக காங்கோ நாட்டிற்கு $83.11 மில்லியன் மதிப்பிலான நிதியை ஒதுக்கியுள்ளது.
- 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆசியப் போட்டிகளில் ஈரான் நாடு வெண்கலப் பதக்கம் வெல்லக் காரணமாக இருந்த செர்பியாவைச் சேர்ந்த வெசிலின் மேட்டிக் என்பவர் இந்திய ஆண்கள் கைப்பந்து அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- முதன்முறையாக உயர் மதிப்புமிக்க கைபேசி நிறுவனமான ஆப்பிள் தனது வாடிக்கையாளர்களுக்காக ஆப்பிள் கடன் அட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## தனுஷ் பீரங்கிகள்

- இந்திய இராணுவமானது உள்நாட்டியே மேம்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட பீரங்கித் துப்பாக்கிகளின் முதலாவது பிரிவை இராணுவத்தில் இணைக்கவிருக்கின்றது.
- அரசிற்குச் சொந்தமான இராணுவத் தொழிற்சாலை ஆணையமானது இந்திய இராணுவத்தின் நீண்ட இலக்கு வரம்புடைய பீரங்கித் துப்பாக்கியை வடிவமைக்கிறது.



- 155 மில்லி மீட்டர் x 45 மில்லி மீட்டர் அகக் குறுக்களவு கொண்ட இந்த பீரங்கித் துப்பாக்கியானது போபர்ஸ் துப்பாக்கிகளை அடிப்படையாகக் கொண்ட எதிர்

பொறியியல் தொழில்நுட்பத்தைக் கொண்டது.

- ❖ K-4 வஜ்ரா மற்றும் M-777 ஆகிய இரண்டு மிகக் குறைந்த எடை கொண்ட பீரங்கித் துப்பாக்கிகள் இந்திய இராணுவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

## இந்தியா – பொலிவியா ஒப்பந்தங்கள்

- ❖ இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பொலிவியப் பயணத்தின் போது இந்தியா மற்றும் பொலிவியா ஆகிய நாடுகளுக்கிடையே 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.
- ❖ பொலிவியா நாட்டின் உயரிய விருதான "கன்டோர் டி லாஸ் என் எல் கிராடோ டி கிரான் காலர்" என்ற விருதானது, அந்நாட்டு அதிபரான எவோ மோராலெஸ் என்பவரால் இராம்நாத் கோவிந்திற்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.
- ❖ சுரங்கம், விண்வெளி, பாரம்பரிய மருத்துவம், தகவல் தொழில்நுட்பத்திற்கான சிறப்பு மிகு மையம் உருவாக்கல் மற்றும் இரட்டை கடல் இரயில்வேத் திட்டம் ஆகிய துறைகளில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## தீவிரவாத கண்காணிப்புக் குழு

- ❖ மத்திய உள்துறை அமைச்சகமானது ஜம்மு காஷ்மீரில் 8 உறுப்பினர்களைக் கொண்ட பல்துறை தீவிரவாத எதிர்ப்புக் குழுவை (TMG - Terror Monitoring Group) உருவாக்கியுள்ளது.
- ❖ தீவிரவாத நடவடிக்கைகளுக்கு இரகசியமாக அல்லது வெளிப்படையாக ஆதரவை வழங்கும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரசாங்க ஊழியர்களிடையே தீவிரவாதிகளின் கடுமையான ஆதரவாளர்களாக இருப்பவர்களுக்கு எதிராக TMG நடவடிக்கை உருவாக்கப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## எய்ட்ஸ் மருந்து - ஹைதராபாத்

- ❖ 3.5 ஆண்டு காலத்திற்கு எய்ட்ஸ் மருந்துகளைத் தயாரிப்பதற்காக ஹைதராபாத்தில் உள்ள லாரஸ் லேப்ஸ் என்ற மருந்து நிறுவனமானது உலக நிதி என்ற அமைப்புடன் ஒரு உத்திசார் பங்காளர் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளது.
- ❖ உலக நிதி என்பது அரசாங்கங்கள், குடிமக்கள், சமூக நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் உலக அறக்கட்டளை நிறுவனம் ஆகியவற்றிற்கிடையேயான ஒரு பங்காளர் நிறுவனமாகும்.
- ❖ உலக நிதியானது 2002 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- ❖ இது எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா ஆகிய தொற்று நோய்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கென்று வடிவமைக்கப்பட்ட திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காக வருடத்திற்கு சுமார் 4 பில்லியன் டாலர்களை முதலீடு செய்கிறது.

## வழிகாட்டுக் கொள்கைகள் மீதான அறிக்கை

- 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே வழிகாட்டுக் கொள்கைகள் மீதான அறிக்கை (SGP - Statement of Guiding Principles) தொடர்பான ஒப்பந்தமானது கையெழுத்திடப்பட்டது.
- SGP ஆனது ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் உள்ள பங்காளர் நாடுகளின் வளர்ச்சி ஆர்வத்தைப் பூர்த்தி செய்வதற்காக இரண்டு நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான கட்டமைப்பை அளிக்கிறது.
- உலக வளர்ச்சிக்கான முத்தரப்பு ஒத்துழைப்பு மீதான வழிகாட்டுக் கொள்கை அறிக்கையின் முதலாவது திருத்தமானது இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளினால் சமீபத்தில் புதுப்பிக்கப்பட்டது.

## மனித வள அறிக்கை - UNDP

- சமத்துவமின்மையின் மீது கவனத்தைச் செலுத்தும் 2019 ஆம் ஆண்டின் மனித வள மேம்பாட்டு அறிக்கையானது (Human Development Report - HDR) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் (United Nations Development Programme - UNDP) வெளியிடப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டின் HDR ஆனது 21-வது நூற்றாண்டை வடிவமைத்துக் கொண்டிருக்கும் சமத்துவமின்மையின் பல வடிவங்கள் குறித்த விரிவான தகவல்களை அளிக்கிறது.
- இந்த அறிக்கையானது முதன்முதலாக 1990 ஆம் ஆண்டில் பாகிஸ்தானைச் சேர்ந்த பொருளாதார அறிஞரான மெகபூப் உல் ஹக் மற்றும் நோபல் பரிசு பெற்ற இந்தியரான அமர்த்தியா சென் ஆகியோரால் ஏற்படுத்தப்பட்டது.
- இந்த அறிக்கையின் நோக்கமானது பொருளாதார விவாதம், கொள்கை மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மக்களை வளர்ச்சி குறித்த செயல்பாடுகளின் மையத்தில் வைக்க வேண்டும் என்பதாகும்.
- இந்த அறிக்கையானது ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுகின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## நிதிப் பற்றாக்குறை இலக்கு

- இந்திய அரசானது 2018-19 ஆம் நிதியாண்டிற்கான நிதிப் பற்றாக்குறை இலக்கை அடையத் தவறிவிட்டது.
- 2018 ஆம் நிதியாண்டில் நிதிப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.5 சதவிகிதமாகும். ஆனால் நிர்ணயிக்கப்பட்ட நிதிப் பற்றாக் குறையின் இலக்கு 3.2 சதவிகிதமாகும்.
- திருத்தப்பட்ட மதிப்பீட்டில் முழு ஆண்டிற்கான நிதிப் பற்றாக் குறையானது ரூ. 6.34 லட்சம் கோடி இருக்க வேண்டும் என மதிப்பிடப்பட்டது. ஆனால் தற்பொழுது நிதிப் பற்றாக்குறையின் மதிப்பு ரூ. 8.51 லட்சம் கோடியாக இருக்கிறது.
- எதிர்பார்க்கப்பட்டதை விட குறைவான வரி வசூலிப்பு மற்றும் தொடர் அரசாங்கச் செலவினங்கள் ஆகியவை இந்த நிதிப் பற்றாக்குறைக்கு முக்கியக் காரணங்களாகும்.

- அடுத்த ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறையின் இலக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.4 சதவிகிதமாகும்.

### வட்டி விகித தருவிப்புகள்

- இந்திய ரிசர்வ் வங்கியானது ரூபாய் மதிப்பிலான வட்டி விகிதப் பரிமாற்றுச் சந்தையை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் ரூபாய் மதிப்பிலான வட்டி விகித தருவிப்புகள் பிரிவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் பங்கு கொள்ள அனுமதிக்கிறது.
- ரூபாய் மதிப்பிலான வட்டி விகிதப் பரிமாற்றச் சந்தை என்பது வட்டி விகித தருவிப்புகள் சந்தைகளிடையே மிகவும் அதிகமான ரொக்க மதிப்பாகும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### விண்வெளிக் கழிவுகள்

- இந்தியாவில் செயற்கைக் கோள் எதிர்ப்பு ஏவுகணைப் பரிசோதனை வெற்றியடைந்ததைத் தொடர்ந்து தாக்கி அழிக்கப்பட்ட செயற்கைக் கோளிலிருந்து மிக அதிக அளவிலான கழிவுகள் உருவாகியுள்ளதாக உலக நாடுகள் கருத்து தெரிவித்துள்ளன.
- விண்வெளிக் கழிவுகள் என்பது பூமியைச் சுற்றிக் கொண்டிருப்பதாகக் கருதப்படும் 7500 டன்கள் அளவு கொண்ட தேவையற்ற வன்பொருட்கள் ஆகும். இது வளர்ந்து வரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.
- விண்வெளிக் கழிவுகள் தொடர்ந்து அதிக அளவில் அதிகரித்து வருவதால், குறிப்பாக சர்வதேச விண்வெளி நிலையம் உள்பட அனைத்து விண்வெளி வாகனங்களுக்கும் பாதிப்பாக அமையும்.
- 1978 ஆம் ஆண்டில் நாசாவின் விண்வெளி ஆராய்ச்சியாளரான டொனால்டு J. கெஸ்லர் என்பவரால் முன்மொழியப்பட்ட கெஸ்லர் குறைபாடானது விண்வெளிக் கழிவுகள் காரணமாக பாதிப்பு ஏற்படும் என்று எச்சரித்துள்ளது.

## விளையாட்டுச் செய்திகள்

### ஆசிய கோப்பை வில்வித்தைப் போட்டி

- பாங்காக்கில் நிறைவு பெற்ற ஆசியக் கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியா ஏழு பதக்கங்களைப் பெற்றுள்ளது.
- இந்தியாவைச் சேர்ந்த மகளிர் வில்வித்தை வீரரான முஸ்கான் கிரார் தொடர்ந்து மூன்று பதக்கங்களை வென்றுள்ளார்.

### சீமாஸ்டர் 2019 ITTF சேலஞ்ச் ப்ளஸ்

- ஓமன் ஓபன் டேபிள் டென்னிஸ் என்று பொதுவாக அறியப்படும் சீமாஸ்டர் 2019 ITTF

சேலஞ்ச் ப்ளஸ் போட்டியானது ஓமனின் மஸ்கட்டில் நடைபெற்றது.

- இந்தத் தொடரில் இந்திய வீரரான G. சத்யன் வெண்கலப் பதக்கத்தையும் 21 வயதுக்குட்பட்டோர் பிரிவில் அர்ச்சனா காமத் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

# முக்கிய தினங்கள்

## இராஜஸ்தான் தினம்

- இராஜஸ்தான் மாநிலம் உருவாக்கப்பட்ட தினத்தை அனுசரிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 30 அன்று இராஜஸ்தான் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1949 ஆம் ஆண்டு மார்ச் 29 வரை இராஜஸ்தான் மாநிலம் இராஜபுத்னா என்றறியப்பட்டது.
- 3,42,239 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இராஜஸ்தான் இந்தியாவின் மிகப்பெரிய மாநிலம் ஆகும்.

## உலக இட்லி தினம்

- ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 30 அன்று உலக இட்லி தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது 2016 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்திய நகரங்களிடையே பெங்களுரு நகரம் இட்லி நுகர்வில் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து மும்பை, சென்னை மற்றும் புனே ஆகிய நகரங்கள் உள்ளன.
- உலக அளவில் இட்லி நுகர்வில் சான் பிரான்சிஸ்கோ, லண்டன் மற்றும் நியூஜெர்சி ஆகிய நகரங்கள் முன்னணியில் உள்ளன.

## புவி நேரம் தினம்

- புவி நேரம் தினம் மார்ச் 30 அன்று அனுசரிக்கப்பட்டது.
- இது உலகம் முழுவதும் உள்ளூர் நேரப்படி இரவு 8.30 முதல் 9.30 வரை கடைபிடிக்கப்படுகின்றது.



- 2019 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு “Connect2Earth” என்பதாகும்.
- “BeeThePlanet சவால்கள்” என்பவற்றுடன் இந்தியாவில் இத்தினம் அனுசரிக்கப்பட்டது.
- இத்தினமானது 2007 ஆம் ஆண்டு சிட்னியில் தொடங்கப்பட்டது. தற்பொழுது இது உலகம் முழுவதும் பிரபலமடைந்துள்ளது.
- இது ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச அரசு சாரா நிறுவனமான இயற்கைக்கான உலகளாவிய நிதியத்தினால் நடத்தப்படுகின்றது.

- - - - - - - - - - - - - - - -